DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.

Case No: **S.C.No.75/2025**

Prosecution Witness P.W.19

Name : **திரு.பிரபு** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்

**நாள்: 07.04.2026**

(சாட்சி காணொளி காட்சி மூலம் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சென்னையில் உள்ள வோடபோன் ஐடியா நிறுவனத்தில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலத்தின் நோடல் அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.11.2024 ம் தேதியன்று காவல் ஆய்வாளர் ஆண்டிப்பட்டி வட்டம், தேனி மாவட்டத்திலிருந்து கண்டமனூர் காவல் நிலைய குற்ற எண் 178/2024, இரண்டு மொபைல் எண்களுக்கான உள் அழைப்பு மற்றும் வெளி அழைப்பு தொடர்பான விபரங்கள், வாடிக்கையாளர் படிவம், மற்றும் சப்ஸ்கிரைபர் Details Records கேட்டு வேண்டுகோள் கடிதம் அனுப்பப்பட்டது.

2. மொபைல் போன் 96262 91997 மற்றும் 86080 30341 ஆகிய எண்களுக்கு 19.10.2024 முதல் 21.10.2024 ஆகிய தேதிகளுக்கான உள் அழைப்பு மற்றும் வெளி அழைப்பு தொடர்பான விவரங்கள் கோரப்பட்டிருந்தது. இதில் கூறப்பட்டுள்ள விபரங்களை எங்கள் நிறுவனத்தில் உள்ள கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு பிரிண்ட் அவுட் எடுத்து 63(4) BSA கீழ் சான்றிதழ் மற்றும் அனைத்து விவரங்களையும் ஆய்வாளர் ராஜதானி, ஆண்டிப்பட்டி துணை வட்டம் ஆகியோர்களுக்கு 11.12.2024 ஆம் தேதியன்று அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை

செய்தார். நான் வழங்கிய சி.டி.ஆர் விபரம் அ.த.சா.ஆ. 23, கஸ்டமர் அப்ளிகேஷன் டீடெயில்ஸ் அ.த.சா.ஆ.24, 63 (4) BSA சான்றிதழ் அ.த.சா.ஆ.25.

3. செல்போன் எண் 96262 91997 என்ற ஃபோன் யார் பெயரில் உள்ளதென்றால் திரு. அஜித் குமார், த/பெ. முனியாண்டி, 29/4, அண்ணா நகர், மயிலாடும்பாறை, ஆண்டிப்பட்டி தாலுக்கா, தேனி தமிழ்நாடு என்ற விலாசத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. 24.09.2024 ம் தேதியிலிருந்து மேற்கண்ட போன் அவர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. மற்றொரு போன் நம்பரான 86080 30341 என்ற போன் நம்பர் திரு. சஞ்சீவிகுமார், த/பெ. செல்வராஜ், 233, சத்யா காலனி, கண்டமனூர் ஆண்டிப்பட்டி தாலுகா, தேனி மாவட்டம், தமிழ்நாடு என்ற விலாசத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட போன் நம்பர் 06.09.2024 ம் தேதியிலிருந்து பயன்பாட்டிலிருந்து வருகிறது.

4. இந்த இரண்டு செல்போன்களுக்கு இடையே 20.10.2024 ம் தேதியன்று எத்தனை முறை கால்கள் சென்றுள்ளது என்று சொல்ல முடியுமா என்றால் 20-ம் தேதியன்று மாலை 18.01.17 வினாடிகளிலும், 18.13.42 வினாடிகளிலும், 18.17.03 வினாடிகளிலும், 18.48.50 வினாடிகளிலும் 9626291997 என்ற ஃபோனில் இருந்து 86080 30341 என்ற ஃபோன் நம்பருக்கு இந்த நான்கு அழைப்புகள் சென்றுள்ளது. அந்த சமயத்தில் இந்த இரண்டு எண்களின் டவர் லொகேஷன் அரண்மனை தெரு, கண்டமனூர், தேனி மாவட்டம் என்ற இடத்திலிருந்து சென்றுள்ளது.

5. இரண்டு போன்களும் ஒரே லொகேஷனான அரண்மனை தெரு, கண்டமனூர், தேனி மாவட்டம் என்ற டவர் லொகேஷன் தான் அந்த அழைப்புகள் வந்தபோது காண்பித்துள்ளது. கடைசியாக 18.48.50 மணிக்கு பிறகு இரண்டு ஃபோன்களும் வேறு ஏதேனும் உள் அழைப்பு வெளி அழைப்பு வந்துள்ளதா என்றால் அன்றைய தினம் 20 ம் தேதி வேறெந்த அழைப்பும் இந்த இரண்டு எண்களுக்கு இடையே செல்லவில்லை.

6. 20 ம் தேதி செல்போன் நம்பர் 86080 30341 என்ற எண்ணில் வேறு ஏதேனும் இரவு 8.00 மணிக்கு மேல் அழைப்பு சென்றுள்ளதா, வந்துள்ளதா என்றால் சென்றுள்ளது. இரவு 7.25-க்கு பிறகு வேறு எந்த அழைப்பும் அந்த

போனிலிருந்து வரவில்லை, அந்த போனுக்கு செல்லவில்லை. அதற்கு மறுநாள் அந்த ஃபோனிலிருந்து வேறு எந்த அழைப்பும் வரவில்லை, செல்லவில்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் சான்றிதழை ஆய்வாளருக்கு அனுப்பி உள்ளேன் என்றால் சரிதான். போனில் யார் பேசினார்கள் என்ற விவரம் என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். நான் சொல்லப்பட்ட நேரத்தில், சொல்லப்பட்ட போனிலிருந்து, சொல்லப்பட்ட போனுக்கு என்ன விஷயங்கள் பேசப்பட்டது என்ற விவரமும் என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். இந்த விபரங்கள் அனைத்தும் எங்கள் நிறுவனத்தின் சர்வரில் இருந்து நாங்கள் பதிவிறக்கம் செய்து எடுத்துக் கொடுத்தோம்.

2. அந்த சர்வர் எங்கள் நிறுவனத்தின் பராமரிப்பில் உள்ளது. எனது நேரடி பராமரிப்பில் அந்த சர்வர் உள்ளதா என்றால் எங்கள் நிறுவனத்தின் அலுவலக அலுவலர்கள் தான் அந்த சர்வரை பராமரித்து வருகிறார், எனது நேரடி கண்ட்ரோலில் அந்த சர்வர் கிடையாது என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை இந்த வழக்கு தொடர்பாக விசாரணை செய்யும்போது முதல் விசாரணையில் சொன்ன டவர் லொகேஷன் குறித்த விபரங்களை நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சட்ட விதிகளை பின்பற்றி இந்த சான்றிதழை வழங்கவில்லை என்றால் சரியல்ல. சட்ட விதிகளை பின்பற்றி இந்த சான்றிதழ் வழங்காத காரணத்தினால் நான் வழங்கிய சான்று சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.04.07 18:04:54 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.